# ஹெச்ஐவிக்கு எதிரான மருந்துகள் (ஆன்டி-ரெட்ரோவைரல் தெரபி)

ஹெச்ஐவிக்கு எதிரான உங்களின் சிகிச்சையின் ஒரு முக்கிய பகுதி ஹெச்ஐவிக்கு எதிரான (ஆன்டி-ஹெச்ஐவி) மருந்துகள். இந்த மருந்துகள் ஹெச்ஐவி வைரஸ் கிருமியின் வளர்ச்சியை தாமதப்படுத்துகிறது. ஹெச்ஐவி ஒரு தனிப்பட்ட வகையான வைரஸ் என்பதால் "ரெட்ரோவைரஸ்" என அழைக்கப்படுகிறது. இதற்கான மருந்துகளை சாதாரணமாக "ஆன்டி-ரெட்ரோவைரல்ஸ்" என்று அழைக்கப்படுகின்றன.

**என்னென்ன** ஆன்டி-ஹெச்ஐவி **மருந்துகள் கிடைக்கின்றன?**
பல்வேறு வகையான ஆன்டி-ஹெச்ஐவி மருந்துகள் உள்ளன. ஹெச்ஐவி வைரஸ் பெருக தேவைப்படும் வெவ்வேறு புரோட்டீன்களை தடுப்பதில், ஒவ்வொரு மருந்தும் செயல்படுகின்றன.

- ஆன்டி-ஹெச்ஐவி மருந்துகளில் இரு வேறு முக்கிய பிரிவுகள் தற்போது கிடைக்கின்றன:
- "**ரிவர்ஸ் ட்ரான்ஸ்க்ரிப்டேஸ்**" எனும் புரோட்டீனை தடுக்கும் மருந்துகள் **ரிவர்ஸ் ட்ரான்ஸ்க்ரிப்டேஸ் இன்ஹிபிட்டர்ஸ் அல்லது ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் (ஆர்டிஐ-ஸ்)** என அழைக்கப்படுகின்றன
- "புரோட்டீஸ்," எனும் புரோட்டீனை தடுக்கும் மருந்துகள் புரோட்டீஸ் இன்ஹிபிட்டர்ஸ் (பிஐ-ஸ்) என அழைக்கப்படுகிறது.

## ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் (ந்யூக்ஸ் மற்றும் நான் ந்யூக்ஸ்)

ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் இரசாயன அமைப்புகளின் வேறுபாடுகளின் அடிப்படையில், ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் அல்லது **ஆர்டிஐ-ஸ்** 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன: ந்யூக்ளியோசைட் ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் (ந்யூக்ஸ் அல்லது என்ஆர்டிஐஸ் என்றும் அழைக்கப்படுகின்றன), நான்-ந்யூக்ளியோசைட் ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் (நான் ந்யூக்ஸ் அல்லது என்என்ஆர்டிஐஸ் என்றும் அழைக்கப்படுகிறது), மற்றும் ந்யூக்ளியோடைட் ஆர்டி இன்ஹிபிட்டர்ஸ் (என்டிஆர்டிஐஸ் என்றும் அழைக்கப்படுகிறது).

## ந்யூக்ஸ் அல்லது என்ஆர்டிஐஸ் பிரிவின் கீழுள்ள மருந்துகள்:

- ஏசெட்டி (ஸைடோவுடைன் அல்லது ரெட்ரோவீர் என்றும் கூறப்படுகிறது)
- டிடிஐ (டைடானோசைன் அல்லது வைடெக்ஸ் அல்லது வைடெக்ஸ் இசி என்றும் கூறப்படுகிறது)
- டிடிசி (ஸால்சிடபைன் அல்லது ஹிவிட் என்றும் கூறப்படுகிறது)
- டி4டி (ஸ்டாவுடைன் அல்லது செரிட் அல்லது செரிட் எக்ஸ் ஆர் என்றும் கூறப்படுகிறது)
- 3டிசி (லாமிவுடைன் அல்லது எபிவிர் என்றும் கூறப்படுகிறது)



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca
CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

- அபாகாவிர் (ஏபிசி அல்லது சியாஜென் என்றும் கூறப்படுகிறது)
- காம்பிவிர் (ஏஸெட்டி + 3டிசி) யின் கலப்பு மருந்து
- ட்ரைசிவிர் (ஏஸெட்டி + 3டிசி + அபாகாவிர் ஆகியவற்றின் கலப்பு மருந்து)

நான்-ந்யூக் அல்லது என்என்ஆர்டிஐ பிரிவைச் சேர்ந்த மருந்துகள்:

- நேவிராபைன் (வைராம்யூன் என்றும் கூறப்படுகிறது)
- டெலாவிர்டைன் (ரெஸ்க்ரிப்டர் என்றும் கூறப்படுகிறது)
- எபாவிரென்ஸ் (ஸஸ்டிவா என்றும் கூறப்படுகிறது)

என்டிஆர்டிஐ பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட மருந்து:

- டெனோபோவிர் (வீரிட் என்றும் கூறப்படுகிறது)

## ப்ரோட்டீஸ் இன்ஹிபிட்டர்ஸ் (பிஐஸ்)

ப்ரோட்டீஸ் இன்ஹிபிட்டர்ஸ் பிரிவைச் சேர்ந்த மருந்துகள்:

- சாக்கினாவீர் (இன்விரேஸ் மற்றும் போர்டோவேஸ் என்றும் கூறப்படுகிறது)
- இன்டினாவீர் (க்ரிக்ஸிவரின் என்றும் கூறப்படுகிறது)
- ரிட்டோநாவீர் (நார்வீர் என்றும் கூறப்படுகிறது)
- நெல்பினாவீர் (விராசெப்ட் என்றும் கூறப்படுகிறது)
- ஆம்பிரினாவீர் (ஆகெனரேஸே என்றும் கூறப்படுகிறது)
- கலேட்ரா (லோபினாவீர் + ரிட்டோநாவீர்)

## நான் எப்போதிலிருந்து ஹெச்ஜவிக்கான மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும்?

ஹெச்ஜவிக்கான மருந்துகளை தொடங்குவது என்பது ஒரு பெரிய முடிவு. இந்த மருந்துகள் சரிவர வேலை செய்ய வேண்டுமென்றால் இதைத் தொடர்ந்து தினமும் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால் இதைத் தொடங்குமுன் இதற்கு தயாராக இருக்க வேண்டும். இதனால் உங்கள் தினசரி அலுவல்களிலும், வாழ்க்கை முறைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

ஹெச்ஜவி சிகிச்சை பற்றிய தகவல் அறிந்த ஒரு டாக்டரை கண்டறிவது மிகவும் முக்கியம். அவர்கள் உங்கள் நிலைமை மற்றும் கலாச்சாரத்தை அறிந்து, சிகிச்சை குறித்த முடிவுகள் எடுப்பதில் உதவ வேண்டும்..

## பொதுவாக ஆன்டி-ஹெச்ஜவி மருந்துகள் எப்போது பரிந்துரைக்கப்படுகிறது என்றால்:

- உங்கள் டி-அணு எண்ணிக்கை (உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியின் அளவு) 350ற்கும் குறைவாக இருந்தால்.
- உங்கள் வைரல் லோட் (உங்கள் ரத்தத்தில் உள்ள ஹெச்ஜவி வைரஸ் அளவு) 55,000ற்கும் அதிகமாக இருந்தால்.
- ஹெச்ஜவி நோய்க்கான அறிகுறிகள் ஏதாவது இருந்தால்.

## நான் எந்த மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும்?

தற்போதைய ஹெச்ஜவி சிகிச்சை முறையின் கீழ் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த

குறைந்தது 3 வித ஆன்டி-ஹெச்ஜ மருந்துகளை சேர்த்து அளிக்கப்படுகிறது.
வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஆன்டி-ஹெச்ஜவி மருந்துகளை சேர்த்து கொடுப்பதற்கு 2 முக்கிய காரணங்கள் உள்ளன:

- ஹெதச்ஜவி வைரஸ் பெருக்கத்தின்போது, வெவ்வேறு நிலைகளில், வெவ்வேறு புரோட்டீன்கள் தேவைப்படுகிறது. பல்வேறு பிரிவைச் சேர்ந்த மருந்துகளை கொடுக்கும்போது, அவை பல்வேறு புரோட்டீன்களை தடுத்து விடுகிறது. அதனால் ஒரே பிரிவைச் சேர்ந்த மருந்தைவிட வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மருந்துகளை சேர்த்து கொடுப்பது கூடுதல் பயன் அளிக்கிறது.
- ஹெச்ஜவி வைரஸ் ஒவ்வொரு முறை பெருகும்போதும் மாறலாம், இதனால் சில ஹெச்ஜவி மருந்துகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. அதனால் அந்த மருந்துகள் வைரஸை எதிர்பதில் பலன் அளிப்பதில்லை. பல்வேறு மருந்துகளை சேர்த்து அளிக்கும்போது, வைரஸ் எல்லா மருந்துகளையும் எதிர்த்து மாறுவது கடினமாகிறது..

எந்தெந்த மருந்துகளை சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உங்களுடன் சேர்ந்து தேர்ந்தெடுக்கும்போது, டாக்டர் கீழ்கண்டவற்றை கருத்தில்கொள்ள வேண்டும்:

- பல்வேறு விதமான ஆன்டி-ஹெச்ஜவி மருந்துகள் (இவை ஹெச்ஜவி வைரஸ் பெருகும்போது பல்வேறு நிலைகளில் தாக்குகிறது)
- மருந்துகளை தொடர்ந்து எடுத்துக்கொள்ளும் உங்கள் திறனை அதிகரிக்கிறது
- பக்கவிளைவுகளைக் குறைக்கிறது
- எதிர்கால மாற்றங்களுக்கு பல வழிகளை அளிக்கிறது

நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய பரிந்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மருந்தை பற்றியும் டாக்டர் அல்லது மருந்து கடைக்காரரிடம் விரிவான தகவல்களை கேட்டறியுங்கள். இந்த மருந்துகளை தொடங்குமுன் உங்கள் கவலைகள் பற்றி அவர்களுடன் பேசி தீர்த்துக்கொள்ளுங்கள்.

## மருந்துகள் வேலை செய்கிறதா என்று எனக்கு எப்படி தெரியும்?

உங்கள் ஆன்டி-ஹெச்ஜவி மருந்துகள் வேலை செய்கிறது (அதாவது ஹெச்ஜவி வைரஸ்-ஐ நன்றாக கட்டுப்படுத்துகிறது), என்றால் நீங்கள் இவற்றை எதிர்பார்க்கலாம்:

Drug Information :: Anti-HIV Medications :: Tamil

ஹெச்ஜவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஜவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் ஏய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய ஏய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளைகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem